

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் திருத்தணியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு மற்றும் சென்னை முதல் திருப்பதி வரை செல்லும் சுற்றுலா பேருந்துகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திடீர் ஆய்வு மேற்கொண்டு உணவின் தரம் மற்றும் பயணிகளின் கருத்துகளை கேட்டறிந்தார்.

# மதுரவாயல் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் அறிக்கை!

சென்னை, ஆக.16-

மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கு இணங்கவும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனையின் பேரில், சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி கழக வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று (16.08.2024) மாலை 6.00 மணி அளவில் நொளம்பூரில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக நிர்வாகிகள் ஆ.மாலினி, ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில், சுரேஷ், ம.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பொருள் : வருகின்ற 18.08.2024 ஆம் தேதி அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (14.8.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் செ.ஸ்டாலின் குமார், க.சிவகாம சுந்தரி, மு.பன்னீர்செல்வம், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் / உறுப்பினர் செயலர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை இணைச் செயலாளர் ஷ்ரவன் குமார் ஜடாவத், அலுவல் சாரா சமூக ஆர்வலர் உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் தா.மோ. அன்பரசன், அ.தமிழ்மாறன் ஆலோசனை வழங்குகின்றனர்!

# பம்மல் தெற்கு பகுதியில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை ஆலோசனைக் கூட்டம்!

## வே.கருணாநிதி தலைமை! இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா பங்கேற்பு!

சென்னை, ஆக.16-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆலோசனைக் கூட்டம் இன்று (16.8.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி அளவில் எஸ்.எஸ். மஹால் பம்மலில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான வே.கருணாநிதி தலைமை ஏற்கிறார். வட்டக் கழகச் செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் வரவேற்புரையாற்றுகிறார்.

ப.காளேஸ்வரன், ஆர்.உமாசங்கர், என்.பன்னீர் செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்திரன், இரா. கந்தவேலு, ஆர்.கோகுல், சு. மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் கழகப் பொருளாளர், கழக மக்களவை குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், க.அன்புச்செல்வன், பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், பி.கே.ஏ.சத்தியபிரபு, பம்மல் மா.சூரன், பா.செல்வம், பி.எஸ்.ரவி,

வட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணா வெங்கடேசன், மு.இன்ப சேகர், என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன் மற்றும் வி.தினேஷ், எஸ்.வெங்கடேஷ், வி.கே.செல்வி, ஏ. அம்சவேணி, கே.செந்தில் குமார், கு.அகிலன், ஏ. சேகர், வே.க.புஷ்பராஜ், டி. என்.ஜான்சன், முகமது ரபி, கே.சந்திரமௌலி உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

பம்மல் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் செ.அமிர்தராஜ் நன்றி உரையாற்றுகிறார்.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

# சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவில் மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டி!

## மு.தென்னவன் - இராம அருணகிரி - அ.கணேசன் - த.சேங்கைமாறன் - கழகத்தினர் பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 16 -

சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் சார்பு அணிகளின் சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழகத் தலைவர் - தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவிலான மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டி இன்று முதல் (ஆகஸ்ட் 16,17,18.2024) 3 நாட்கள் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமை ஏற்கிறார்.

இவ்விழாவில் மாநில இலக்கிய அணித்தலைவர் மு.தென்னவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராம.அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் சேங்கை மாறன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி சேர்மன் ந.அம்பலமுத்து, தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், பேரூர்ச் செயலாளர் தி.கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர் மு.சோமசுந்தரம், பி. ஆர்.பெருமாள், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ்.முத்துக்குமார், பேரூராட்சி துணைச் சேர்மன் இந்தியன் செந்தில் குமார், ஜமாத் தலைவர் எம்.ராஜாமுகமது, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அஞ்சப்பர் எஸ்.ஜெயராமன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் கேஎஸ். நாராயணன், மருத்துவர் இ.அருள்மணி நாகராஜன், கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர். செல்வகுமார், பேரூர் கழகப் பொருளாளர் க.செந்தில்கிருஷ்ணன், வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முதல் பரிசு - ரூ.100071 - வழங்குபவர் கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்.

இரண்டாம் பரிசு - ரூ. 75071 வழங்குபவர் - அம்பல முத்து (பேரூராட்சி சேர்மன்),

மூன்றாம் பரிசு - ரூ.50071 வழங்குபவர் - முறையூர் ஊராட்சி மன்றத் தலைவர் என்.எம்.சுரேஷ்,

நான்காம் பரிசு - ரூ.25071 வழங்குபவர் - இந்தியன் செந்தில்குமார் (பேரூராட்சி துணைச் சேர்மன்).

மேலும் இந்நிகழ்வில், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக்கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கபாடி போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் பேரூர்க் கழக அவைத்தலைவர் ஆர்.சிவக்குமார், ஒன்றியப் பொருளாளர் ஆ.பாஸ்கரன், மாவட்ட அயலக அணி துணைஅமைப்பாளர் ஆர்.புகழேந்தி, அகில இந்திய கபாடி போட்டி நடுவர் எஸ்.சிவனேஷ்குமரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் அ.சையது இப்ராகிம் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி

# சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் அறிக்கை!

சென்னை, ஆக். 16

சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் தலைமையில் இன்று (16.8.2024 வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி, எண். 26 / 71, கே.எஸ்.ஆர். மஹால், ஃபர்ஸ்ட் மெயின் ரோடு ஸ்ரீனிவாசன் நகர் கொளத்தூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட வர்த்தக அணித் தலைவர், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள், பகுதி வர்த்தக அணி அமைப்பாளர்கள், பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



78-வது ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி ஒன்றியம் கோரமங்கலம் ஊராட்சியில் கிராமசபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் நரசிம்மராஜுலு தலைமையில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் கலந்துகொண்டு பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டறிந்து வளர்ச்சி பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன், தாசில்தார் மலர்விழி, வட்டாட்சிய அலுவலர் சந்தானம் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஷாம் சுந்தர், டில்லிபாபு, ஷரீப், ஹரி பாபு உள்பட பொதுமக்கள்கள் பலர் கலந்து கொண்டனர்.

சுதந்திர தின விழா! சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில்

# தேசியக் கொடி ஏற்றிவைத்து மேயர் ஆர்.பிரியா மரியாதை!

சென்னை, ஆக.16

பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று (15.08.2024) இந்திய சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.

அதனைத் தொடர்ந்து, மேயர் அவர்கள் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியர் மற்றும் இசைக்குழுவின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சஞ்சீவராயன் தெரு சென்னை நடுநிலைப் பள்ளி, அன்னை சிவகாமி நகர் சென்னை தொடக்கப் பள்ளி, எருக்கஞ்சேரி சென்னை நடுநிலைப் பள்ளி, அம்மையம்மாள் தெரு சென்னை தொடக்கப்பள்ளி, புழல் சென்னை நடுநிலைப்பள்ளி, கிருஷ்ணாம்பேட்டை சென்னை நடுநிலைப்பள்ளி, நுங்கம் பாக்கம்சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காமராஜ் அவென்யூ சென்னை உயர்நிலைப் பள்ளி களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் கண்கவரும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மிக அதிகமாக சொத்துவரி செலுத்திய 3 நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும், வட்டாரங்கள் அளவில் உரிய காலங்களில் முறையாக தாமதமில்லாமல் சொத்துவரி செலுத்திய 3 சொத்து உரிமையாளர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களை (*Letter of Appreciation*) மேயர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.

தொடர்ச்சியாக, 2022-23ஆம் ஆண்டு குடும்பநலத் திட்டப்பணிகளில் மாவட்ட அளவில் சிறந்த சேவை வழங்கியதற்காக மண்டல மருத்துவ அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், பணி செவிலியர், மயக்கவியல் நிபுணர், குடும்பநல ஆலோசகர் என 8 மருத்துவ அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை வழங்கினார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 131 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், தேசிய மாணவர் படை, சாரண சாரணியர்கள் மற்றும் கலை நிகழச்சிகளில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர்கள் டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, (சுகாதாரம்) திருமதி ஆர். லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் விஜயா ராணி, துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ண மூர்த்தி, வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), எம்.பி. அமித், (தெற்கு), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இ ர ா ம லி ங் க ம் , நிலைக்குழுத் தலைவர்கள் த.இளைய அருணா (நகரமைப்பு), த.விசுவ நாதன் (கல்வி), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் (இராயபுரம்) பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கும்முடிப்பூண்டி தொகுதி பூண்டி ஒன்றியம் - நியாயவிலைக் கடை கட்டிடம் திறப்பு!

# மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கும்மிடிப்பூண்டி, ஆக.16-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, பூண்டி கிழக்கு ஒன்றியம், மெய்யூர் ஊராட்சியில் ஜெ.ஜெ.601 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் 9 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ஒரு கோடியே பன்னிரெண்டு லட்சம் கடன் உதவி வழங்கி ராசபாளையம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக்கடை கட்டித்தை மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்த வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஜான் (எ) பொன்னுசாமி, துணைப்பதிவாளர் சீனிவாசன், தனி அலுவலர் இளையராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர் மகேஷ்பாபு, மாவட்ட குழு உறுப்பினர் சுதாகர், ஊராட்சி மன்றதலைவர் லாவாண்யா. கவுன்சிலர் தேன்மொழி, ஏழுமலை, கூட்டுறவு செயலர் ஏழுமலை, பி.சிவய்யா, எஸ்.நாகராஜ், ராகவன், தில்லைக்குமார், டி.சீனிவாசன், விஜயன், ரா.காண்டீபன், ஸ்ரீராமு, டி.ஆர்.கே.வாசு, பூபாலன், வேல்முருகன், டார்த்தி, குருமூர்த்தி, சுரேஷ், பி.கே.நாராயணசாமி, ராமாராவ், கலவைவேலு, ராசபாளையம், நிர்வாகிகள் கஜபதிரெட்டியார், ரவி, குப்பன், மணி, ரமேஷ், கோட்டி, டார்லிங் ராஜா, சந்திரசேகர், ரகுபதி, சுரேஷ், மோகன், மணி ரெட்டியார், அரிகிருஷ்ணன், தட்சணாமூர்த்தி, சம்சுதீன், ரஹூம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பாக்குவாஞ்சேரி கிளைக் கழக முன்னாள் அவைத் தலைவர்

# மு.ராஜமாணிக்கத்தின் துணைவியார் ரா.லட்சுமி நினைவஞ்சலி!

## கழகத்தினர் அஞ்சலி!

காஞ்சிபுரம், ஆக. 16-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் தெற்கு ஒன்றியம், பாக்குவாஞ்சேரி கிராமம் கிளைக் கழக முன்னாள் அவைத் தலைவர் மு.ராஜ மாணிக்கத்தின் துணைவியாரும் பாக்குவாஞ்சேரி கிளைக் கழகப் பிரதிநிதி பெ.திரு வேங்கடத்தின் பெரிய தாயாருமான ரா.லட்சுமி 30.7.2023 புதன் அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் 16ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (16.8.2024 - வெள்ளி) மாலை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.பி. பச்சையப்பன்

### ஆகஸ்ட் 16 (2022)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளராகவும், அதனை தொடர்ந்து 1991 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1967ல் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

ஒன்றிய பெருந்தலைவராகவும் , பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர்.

1964ல் கடலூரில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**